STC. 434 / 21
P.W.1.சங்கர நாராயணன்
Date 19.12.2022

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.
கு.வி.

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ், ஆங்கிலம் நன்கு எழுத படிக்க தெரியும் என்றால் தெரியும். நான் அனுப்பிய வழக்கறிஞர் அனுப்பிய விபரங்கள் தெரியுமா என்றால் எனக்கு தெரியும். அறிவிப்பில் உள்ள விபரங்களை நான் கூறி தான் அவர் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றார் சரிதான். நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் டைமன் பிரிண்ட் பேக் தொழில் செய்து வருகிறேன். எனது நிறுவனத்தில் 8 பேர்கள் வேலை செய்கிறார்கள். எனது நிறுவனத்தில் வேலை பார்க்கும் நபர்களுக்கு பி. எப் பிடிக்கிறேனா என்றால் இல்லை. பி.எப் பிடிக்கவில்லை என்றால் வழக்கிற்காக மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் வருமான வரி செலுத்திவரும் நபர் என்றால் சரிதான். நான் 2016 லிருந்து வருமான வரி செலுத்தி வருகிறேன். 2019-2022 வரை நான் வருமான வரி செலுத்தி எவ்வளவு செலுத்தி வருகிறேன் என்ற விபரத்தை வருமான வரி நோட்டை பார்த்தால் தெரியுமா என்றால் 2019 வரை வருமான வரி செலுத்தி வருகிறேன். 2020 லிருந்து கொரானா சமயம் என்பதால் செலுத்தவில்லை. எதிரி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் நான் அவர் கடைக்கு செல்லும்போது தெரியும். எதிரியை கடைசி மூன்று வருடமாக நன்றாக தெரியுமா என்றால் தெரியும். எதிரியின் குடும்ப உறுப்பினர்களை பற்றி தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் வீடு எங்கு உள்ளது என்றால் வெம்பக்கோட்டையிலிருந்து ஆலங்குளம் செல்லும் ரோட்டில் உள்ள இந்திரா நகரில் உள்ளது.

நான் பிரிண்டிங் பிரஸ் தொழில் செய்து வருவதால் எனது அன்றாட வரவு, செலவு மற்றும் பராமரிப்பிற்கு கணக்கு வழக்குகள் உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி செலவிற்குகளுக்கு தனியாக லெட்சார் வைத்துள்ளேன் என்றால் வைத்திருக்கிறேன். அந்த லேட்சர் நோட்டை பார்த்தால் யார் யாருக்கு பணம் கொடுத்துள்ளேன் என்றும் யார் யாரிடம் பணம் பெற்றுள்ளேன் என்ற விபரம் தெரியவருமா என்றால் தெரியவரும். கடந்த 1.11.2019 ம் தேதியன்று வரவு செலவு

கணக்கு வைத்து லெட்சர் நோட்டில் குறிப்பிட்டுள்ளதா என்றால் நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகள் மட்டும் குறிப்பிட்டிருக்கும். லெட்சர் நோட்டை பார்த்தால அன்றாட வரவு செலவு கணக்குகள் தெரியும் என்றால் நிறுவனத்தின் அன்றாட வரவு செலவு கணக்குகள் மட்டும் தான் தெரியும். அந்த லெட்சர் நோட்டை தேவைபட்டால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக இருக்கிறேனா என்றால் தயாராக இருக்கிறேன்.

எதிரி என்னிடம் என்ன தேதியில் பணம் வாங்கினாரா என்றார் 1.11.2019 ம் தேதியில் எனது அலுவலகத்தில் வைத்து பணம் வாங்கினார். பணம் வாங்கும் போது எத்தனை மணி இருக்கும் என்றால் காலை 11 மணி இருக்கும். எதிரி என்னிடம் எப்போது, எங்கு வைத்து பணம் வாங்கினார் என்ற விபரத்தை குறிப்பிட்டு எனது நிரூபண வாக்குமூலத்திலும், புகார் வாக்குமூலத்திலும், சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை. பணத்தின் டினாமேட்சனை குறித்து வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. பொதுவாக ஐம்தாயிரத்திற்கு மேல் பணம் கொடுக்க வேண்டுமென்றால் வங்கியின் மூலம் தான் செலுத்த வேண்டும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.எதிரிக்கு பணம் கொடுக்கும் போது செக்யூரிட்டியாக ஏதேனும் ஆவணம் அவரிடமிருந்து வாங்கினேனா என்றால் வாங்கவில்லை. எதிரி என்னிடம் எந்த பணமும் 01.11.2019 ம் தேதியில் வாங்கவில்லை என்பதால் தான் அவரிடமிருந்து எந்தவொரு ஆவணமும் எழுதி வாங்கவில்லை என்றால் சரியல்ல.

எதிரி என்னிடம் காசோலை கொடுத்தார் என்றால் 18.03.2021 ம் தேதி கொடுத்தார். எங்கு வைத்து எத்தனை மணிக்கு காசோலை கொடுத்தார் என்றால் எனது அலுவலகத்தில் வைத்து கொடுத்தார், நேரம் ஞாபகமில்லை. மேற்படி விபரத்தை எனது புகாரிலும், நிரூபண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். காசோலையில் உள்ள நிரப்பட்ட எழுத்துகளின் மையும் , கையெழுத்தின் மையும் ஒரே மைதான் என்றால் இல்லை. வழக்கு காசோலை யார் முன்னிலையில் நிரப்பட்டது என்றால் அவர் எழுதிதான் கொண்டு வந்தார். எதிரி என்ன படித்து இருக்கார் என்றால் எனக்கு தெரியாது. எதிரி காசோலையை எனது அலுவலகத்திற்கு வரும்போதே எழுதி கொண்டுதான் வந்தா் என்ற விபரத்தை வழக்கு ஆவணங்களில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

வழக்கு காசோலையை எந்த தேதியிலிருந்து கலெக்சனுக்கு போட்டேன்

என்றால் 22.3.2021 ம் தேதியன்று போட்டேன். வழக்கு ஆவணங்களில் மேற்படி தேதியை தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பு.சா.ஆ. 2 ஆவணத்தின் 23.3.2021 ம் என்ற தேதியில் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரி எனக்கு 2015 ம் வருடத்திலிருந்து பழக்கம் என்றால் சரியல்ல. 2016 ம் ஆண்டு எதிரி என்னிடம் ரூ 50000 கடனாக வாங்கினார் என்றால் சரியல்ல. அவர் வாங்கினகடனுக்கு வட்டி 2000 போக ரூ 48000 த்தை நெப்ட்(Neft) மூலியமாக எனக்கு திருப்பி செலுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மேலும் நவம்பர் மாதம் 2016 ம் வருடத்தில் ரூ 40000 கடனாக எதிரி என்னிடம் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல.

எதிரி என்னிடம் பணம் வாங்கினார் என்றும், பணத்திற்கு செக்யூரிட்டியாக வழக்கு காசோலையை என்னிடம் கொடுத்தார் என்றால் சரியல்ல. நான் வாங்கிய 40000 பணத்திற்கும் 9.12.2016 ம் தேதி காசோலை எண் 118659 ஐஓபி , வெம்பக்கோட்டை 40000 ம் , 20.12.2016 ம் தேதி காசோலை எண் 118662 ஐஓபி , வெம்பக்கோட்டை 20000 த்திற்கும், நெப்ட் மூலமாக நான் வாங்கிய பணத்திற்கு வட்டியுடன் ரூ 60000 செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. நான் அதிகமான வட்டிக்கு ஆச பட்டு 2016 ம் வருடம் எதிரி எனக்கு செக்யூரிட்டியாக கொடுத்த காசோலையை கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக கூறப்படும் 1.11.2019 ம தேதியன்று எதிரி கோவையில் உள்ள எஸ்டி பி செக்யூரிட்டி சர்வீஸில் ஏம் பிஓ வேவ்ஸ் இந்திய பிரவேட் லிமிட்டேட் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார் என்றால் தெரியாது. எதிரி என்னிடம் காசோலை கொடுத்தாக சொல்லப்படும் தேதி 18.3.2021 ம் தேதியன்று எதிரியின் சித்தி முத்துலட்சுமியின் மகன் மனநல பாதித்த சிவசுப்பிரமணியனை தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள கீழஈரால் அருகில் உள்ள செம்மன புதூர் என்ற ஊரில் உள்ள அக்டிவ் மைன்ட் என்ற காப்பகத்தில் அவர் இருந்தாரா என்றால் தெரியாது. நான் பொதுவாக எத்தனை காசோலை வழக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 5,6 வழக்குகள் இருக்கும். நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றும் , எதிரிக்கு நான் வட்டிக்கு பணம் கொடுக்கும் சமயத்தில் அவரிடமிருந்து செக்யூரிட்டியாக பெற்ற காசோலையை கொண்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் , சொன்ன இடத்தில் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றும் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.